மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு. தேனி
ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,
தேனி.

சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாக பணியாற்ற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தேனி, பெரியகுளம், உத்தமபாளையம். போடி மற்றும் ஆண்டிப்பட்டி ஆகிய ஊர்களில் இயங்கும் மாவட்ட / வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாக பணியாற்ற கீழே குறிப்பிடப்பட்ட நபர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மேலே குறிப்பிட்ட ஊரைச் சார்ந்தவராக இருக்கவேண்டும்.

a) ஆசிரியர்கள் (ஓய்வுபெற்றவர்கள்)
b) ஓய்வுபெற்ற அரசுஊழியர்கள் மற்றும் மூத்தகுடிமக்கள்
c) சமூகப்பணியில் முதுநிலைக் கல்விபயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
d) அங்கன்வாடி பணியாளர்கள்
e) மருத்துவர்கள் / உடல்நலநிபுணர்கள்
f) மாணவர்கள் மற்றும் சட்டக்கல்லூரி மாணவர்கள் (அவர்கள் வழக்கறிஞராக பதிவுசெய்யும் வரை)
g) அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூகசேவை நிறுவனங்கள் மற்றும் சங்கப்பிரமுகர்கள்
h) மகளிர்குழுக்கள், மைத்ரிசங்கங்கள் மற்றும் வறியோரை உள்ளடக்கிய சுயஉதவிக்குழுக்கள் ஆகியவற்றில் உறுப்பினர்கள்
i) நீண்டகால தண்டனை பெற்று சிறையிலுள்ள படித்த சிறைவாசிகள்
j) மாவட்ட / வட்ட சட்டப்பணிகள் தன்னார்வ சட்டப்பணியாளர்கள் பணிக்கு பொருத்தமாக கருதும் நபர்கள்

1.	கல்வித் தகுதி	பள்ளி இறுதி வகுப்பில் (10ம் வகுப்பு) தேர்ச்சி பெற்றவராகவும், விரிவாகப் புரிந்துணரும் திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
2.	இதர தகுதிகள்	சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள், இரக்கம், ஏனையவரின் உணர்வுகளை புரிந்து கொள்ளும் தன்மை, கலப்படமற்ற தூய்மை ஆகிய அடிப்படை மனித குணங்களின் மீது ஒன்றி இருத்தல், எவ்வித பணப்பயனும் எதிர்பார்க்காமல் தன்னார்வ சேவை புரிதல், தங்கள் பணிகளில் இருந்து வருமானத்தை எதிர் நோக்காதவர்களாகவும், ஆனால் இச்சமுகத்தின் பலவீனமான பிரிவினர், வறியவர்கள் ஆகியோரை

D.no: 1831/26
04/08/26

		மேலுயர்த்துவதற்கான உறுதியும், உணரும் திறனும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் ஓட்ட தெரிந்திருக்க வேண்டும். (ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்).
3.	வயது	18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4.	மதிப்பூதியம்	பணிபுரியும் நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.750/- மதிப்பூதியமாக வழங்கப்படும்.
5.	விண்ணப்பிக்க கடைசி நாள்	25.08.2026 மாலை 5.30 மணி
6.	பணிக்காலம்	தேர்வு செய்யப்படும் நாளிலிருந்து ஒரு ஆண்டு
7.	காலி பணியிடங்களின் எண்ணிக்கை	50 நபர்கள்

விருப்பம் உள்ளவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்படிவத்தை மட்டுமே பதிவிறக்கம் செய்து, அவ்விண்ணப்படிவத்தினை தெளிவாக பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களின் நகல்களுடன் தபாலிலோ அல்லது நேரிலோ கீழே கண்ட முகவரிக்கு 25.08.2025 தேதி மாலை 5.30 மணிக்குள்ளோ அல்லது அதற்கு முன்பாகவோ மேற்படி அலுவலகத்திற்கு அலுவலக வேலை நாட்களில் கிடைக்கப்பெறுமாறு அனுப்பக் கோரப்படுகிறது.

உயர்திரு. தலைவர் அவர்கள்,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
மாற்று சமரச தீர்வு மையம்,
ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,
தேனி 624 004.

மேலும், விண்ணப்பதார்கள் நேர்காணல் குறித்த தேதி https://theni.dcourts.gov.in/ இணையதளம் மூலமாக பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

குறிப்பு : சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் பணி நிரந்தர பணி அல்ல. பணி நிரந்தரம் செய்ய உரிமை கோரமுடியாது.

1/8/26.

தலைவர் /முதன்மைமாவட்டநீதிபதி,
மாவட்டசட்டப்பணிகள்ஆணைக்குழு,
தேனி.

மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, தேனி
சட்ட தன்னார்வ தொண்டார்களாக பணிபுரிவதற்கான விண்ணப்ப படிவம்

புகைப்படம்

1	விண்ணப்பதாரரின் பெயர்	:	
2	தந்தை / கணவர் பெயர்	:	
3	பாலினம்	:	ஆண் / பெண் / மூன்றாம் பாலினத்தவர்
4	பிறந்த தேதி மற்றும் வயது (சான்றிதழை இணைக்கவும்)	:	
5	கல்வித் தகுதி (சான்றிதழை இணைக்கவும்)	:	
6	இனம், மதம் மற்றும் தாய்மொழி	:	
7	நிரந்தர முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி	:	
8	இதற்கு முன் தன்னார்வ சட்டப்பணியாளராக சேவை செய்த அனுபவம் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரம் (வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்)	:	
9	இருசக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனம் ஓட்ட தெரிந்தவரா? (ஓட்ட தெரிந்திருந்தால் ஓட்டுநர் உரிமம் எண் குறிப்பிடவும் அதன் நகல் இணைக்கவும்)		
10	திருமண நிலை	:	

11	காவல்துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம்	:	
12	தாங்கள் எந்தப் பகுதியில் சட்ட தன்னார்வலராக பணிபுரிய விரும்புகிறீர்கள் (டிக் செய்யவும்)	:	☐ தேனி ☐ பெரியகுளம் ☐ ஆண்டிபட்டி ☐ உத்தமபாளையம் ☐ போடிநாயக்கனூர்

13. கீழ்கண்ட எந்த பிரிவின் கீழ் விண்ணப்பிக்கிறீர்கள் (அதற்கான சான்றிதழை இணைக்கவும்)

வ.எண்	பிரிவுகள்	விண்ணப்பிக்கும் பிரிவு
1	ஆசிரியர் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)	
2	ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள்	
3	உளவியலாளர் (மனோதத்துவ நிபுணர்)	
4	MSW Students & Teacher - பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள்	
5	அங்கன்வாடி பணியாளர்கள்	
6	மருத்துவர்கள் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சட்ட மாணவர்கள்	
7	அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்க பிரமுகர்கள்	
8	திருநங்கைகள்	

மேற்கூறிய அனைத்து தகவல்களும் உண்மை என சான்றளிக்கிறேன். உரிய சான்றிதழ்களின் நகலை இணைத்துள்ளேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள்:

இடம்: